**INTERNATIONAL ASSOCIATION OF TAMIL JOURNALISTS**

**சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியம்**


02.05.2006

## தமிழ் ஊடகவியலாளர்களுக்கெதிராக தொடரும் வன்முறைகளை தடுக்க சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்கவேண்டும்

அனைத்துலக ஊடகவியலாளர்கள் தினத்தை அகிலமெங்கிலுமுள்ள ஊடகவியலாளர்கள் நினைவுகூரும் இன்றைய தினத்தில் சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியத்தின் சார்பில் நாங்களும் இத்தினத்தை எமது அடிப்படை உரிமைகளுக்கும் சுதந்திரத்திற்கும் பாதுகாப்புக்கும் பறைசாற்றும் நாளாக பிரகடணப்படுத்துகின்றோம்

இலங்கையில் அதிகரித்துவரும் பத்திரிகையாளர்கள் பத்திரிகை நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு எதிராக திட்டமிட்டு நடாத்தப்படும் படுகொலைகளையும் அழிப்பையும் நாம் வன்மையாக கண்டிப்ப தோடு இலங்கை அரசின் உச்சக்கட்ட இன ஒழிப்பு நடவடிக்கையை உலக அரங்கிற்கு கொண்டுவருகின்றோம்.

இன்று நடைபெற்ற உதயன் பத்திரிகைக்கு எதிரான படுகொலைகளையும் வன்முறை அழிப்பையும் இலங்கை அரசின் பின்னணியிலேயே நடைபெற்றுள்ளதென்பதை உலக அரங்கில் முன்வைப்பதோடு இதை மிகவும் வன்மையாக கண்டிக்கிறோம்.

இலங்கையில் தமிழ் ஊடகவியலாளர்களையும் ஊடக நிறுவனங்களையும் அழித்தொழிப்பதற்கு கங்கணம் கட்டி நிற்கும் இலங்கை அரசு மற்றும் அதனோடு இணைந்து செயற்படும் சக்திகளுக்கு எதிராக சர்வதேச ஊடகவியலாளர்களும் ஊடக நிறுவனங்களும் மனித உரிமை அமைப்புக்களும் குரல் கொடுப்பதோடு இதை தடுத்து நிறுத்துவதற்குரிய ஆக்க **பூ**ர்வமான நடவடிக்களை எடுக்குமாறு வேண்டுகின்றோம்.

எம்மவர்களின் அடிப்படை உரிமைகளும் சுதந்திரமும் பாதுகாப்பும் இலங்கையில் நாளுக்கு நாள் நலிவடைந்து வரும் வேளையில் இதற்கெதிராக உலகளாவிய ரீதியில் அனைத்துலக பத்திரிகையாளர்களுடன் நாமும் கைகோர்த்து எம் இலட்சியத்திற்காக குரல் கொடுப்போம் என சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியத்தின் செயலாளரும் டென்மார்க் பத்திரிகையாளருமான திரு. குகன் தம்பிப்பிள்ளை அவர்கள் தெரிவித்துள்ளார்.

திரு. குகதாசன்
செயலாளர்
சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியம்.


President:
Anandhi Suriyaprakasam
Tel: 00442085437226

Secretary:
Kugathasan Thambipillai
Tel: 004597250917

Website: http://www.iataj.org Mail: iataj@iataj.org